

# SIVAPURANAM

## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 32. பிரார்த்தனைப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

சதாமுத்தி

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



கலந்து நின் அடியாரோடு அன்று
வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்துநின்றது இடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே 1





அடியார் சிலர் உன்அருள் பெற்றார்
ஆர்வங்கூர யான் அவமே
முடைஆர் பிணத்தின் முடிவுஇன்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடு வினையைக்
களைந்துஉன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவாது உருக அருளாயே 2





அருளார் அமுதப் பெருங்கடல்வாய்
அடியார் எல்லாம் புக்குஅழுந்த
இருளார் ஆக்கைஇது பொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்துஓர் உன்மத்தன்
வருமால் என்றிங்கு எனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்அன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே 3





வேண்டும் வேண்டும் மெய்யடியார்
உள்ளே விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமாமணி முத்தே
தூண்டா விளக்கின் சுடர்அனையாய்
தொண்டனேற்கும் உண்டாம்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே 4





மேவும் உன்தன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயல்கண்ணாள்
பங்கா உன்தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ
பரமஆனந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான்எனது என்று
யாதும் இன்றி அறுதலே 5





அறவே பெற்றார் நின்அன்பர்
அந்தம்இன்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாய் பிரிவுஇல்லா
மறவா நினையா அளவுஇலா
மாளா இன்ப மாகடலே 6





கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துஉண்ண
இடரே பெருக்கி ஏசற்றுஇங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளிதி என்றுஉணர்த்தாது
ஒழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடர்ஆர் அருளால் இருள்நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே 7





துணியா உருகா அருள்பெருகத்
தோன்றும் தொண்டர்இடைப்புகுந்து
திணியார் மூங்கில் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியார் அடியார் உனக்குஉள்ள
அன்பும் தாராய் அருள்அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
தளிர்ப்பொற் பாதம் தாராயே 8





தாரா அருள்ஒன்று இன்றியே
தந்தாய் என்று உன்தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீர்ஆர் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரானந்தம் பேராமை வைக்க
வேண்டும் பெருமானே 9





மான்ஓர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனம்நெகா
நான்ஓர் தோளாச் சுரைஒத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற்கு என்றோ கூடுவதே 10





கூடிக்கூடி உன் அடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடிவாடி வழிஅற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடிஊடி உடையாயொடு கலந்து
உள்உருகிப் பெருகிநெக்கு
ஆடிஆடி ஆனந்தம்
அதுவேயாக அருள்கலந்தே 10



ஸ்ரீ மாணிக்கவாசகர்